1971 டிசம்பர் 10]

(இ) ஆம் எனில், வருடா வருடம் விவசாயத் துறையில் பட்டம் பெறுகின்ற ஏறத்தாழ 250 (இருநூற்றி ஐம்பது) பேர்களுக்கு காலப்போக்கில் வேலை வாய்ப்பு அளிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) ஆம். இது பரிசிலனையில் இருந்துவருகிறது.

(இ) தற்போது, இம்மாநிலத்தில் வேளாண்மைப் பட்டதாரிகளிடையே வேலையில்லாப் பிரச்சினை இல்லை. வேளாண்மைக் கல்லூரிகளிலிருந்து பட்டம் பெற்று அவ்வப்போது வரும் வேளாண்மைப் பட்டதாரிகள் வேளாண்மைத் திட்டங்களில், பணியில் அமர்த்தப்படுகிறார்கள்.

திரு. என். மருதாசலம்: இந்த 250 பேர்களில் எவ்வளவு பேர்கள் பட்டம் பெற்றவர்கள்? எவ்வளவு பேர்களுக்கு வேலை அளிக்கப்பட்டிருக்கிறது? அதில் தாழ்த்தப்பட்ட மாணவர்கள் எவ்வளவு பேர்கள்?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: பட்டம் பெற்றவர்கள் 241, பட்டம் பெறாதவர்கள் 9 பேர்கள். ஆனால் 250 பேர்களுக்கும் வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது. தாழ்த்தப்பட்டவர்களுக்கு, எவ்வளவு பேர்களுக்குக் கொடுக்கப்பட்டது என்பதற்குத் தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் சொல்கிறேன்.

வாடிப்பட்டியில் பின்தங்கிய வகுப்பு மாணவர்களுக்கு விடுதி

*238 வினா.—**திரு. பி. எஸ். மணியன்:** மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், வாடிப்பட்டியில் பின்தங்கிய மாணவர் விடுதி அமைக்கும் குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: டி. வாடிப்பட்டியில், பின்தங்கிய மாணவர்களுக்கான உணவு விடுதி 1972-73-ம் ஆண்டில் ஆரம்பிக்கும் யோசனை அரசின் பரிசிலனையில் உள்ளது.

கடல் அலைகளிலிருந்து மின் சக்தி

* 239 வினா.—**திரு. கே. என். குமாரசாமி:** மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் கடல் அலைகளில் இருந்து மின்சாரம் எடுக்க திட்டம் ஏதேனும் அரசு பரிசிலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனின், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

சந்தன 'அத்தர்' உற்பத்தி

* 240 வினா.—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு தரப்பில் புதிதாக சந்தன அத்தர் தொழிற்சாலைகளை துவக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசிலனையில் உள்ளதா?